RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S126

# Maternal Medicine in Ancient Tamil Literature

## பழந்தமிழ் இலக்கியங்களில் தாய் நல மருத்துவம்

A. Precilla [a,*]

[a] Department of Tamil, University of Kerala, Thiruvananthapuram, Kerala-695034, India.

*Corresponding author Email: precillamunnar@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S126

Received: 13-04-2022; Revised: 29-07-2022; Accepted: 05-08-2022; Published: 20-08-2022

**Abstract:** A man who has been in harmony with nature in forests and mountains discovered the medicinal properties of the leaves. The medical ideas known by the ancient Tamils were later expanded under many names. Ancient Tamil literature explains the symptoms and methods of protection prescribed by today's modern medicine. Among them, medicine related to women is unique. Ancient Tamil songs tell us about the changes in a woman's skin, the signs of embryo formation, the defects that occur after formation, the carelessness in child birth, and the irresponsibility that fails to observe before and after childbirth. The purpose of this article is to reveal the special maternal health medicine that ancient Tamil people felt.

**Keywords:** Tamil Literature, Maternal Medicine, Child Birth, Modern Medicine

**Language:** Tamil

## முன்னுரை

பழந்தமிழர் வளர்த்தெடுத்த கலைகளில் ஒன்று மருத்துவக்கலை. உடல், உள்ளம், உணர்வு ஆகியவற்றில் குறைகள் நேர்ந்தால் மருத்துவம் தேவையாகிறது என்பதை பழந்தமிழ் மருத்துவர்கள் அறிந்து வைத்திருந்தனர். அத்தகைய தொரு மருத்துவ சிந்தனையில் ஒரு பெண்ணானவள் திருமணத்திற்கு முன்னும் திருமணத்திற்குப் பின்னும் உடலையும் உள்ளத்தையும் பாதுகாக்காவிடில் நோய் தோன்றும். குழந்தைப்பேறு வாய்க்கப் பெற்றவளாக பெண் திகழ வேண்டுமானால் கருவளம் நன்முறையில் அமைய வேண்டும். கருவளர்ச்சி நாட்களிலும் குழந்தை பிறந்த பின்னும் பிறந்த குழந்தையைப் பாலூட்டி வளர்ப்பதிலும் அவளது பங்கு இன்றியமையாததாகிறது. இவற்றில் சிறு பிழைகள் ஏற்பட்டாலும் அது அவளது உடல் நலத்தையும், உள்ளத்து உணர்வுகளையும், கருவையும், குழந்தையையும் உருக்குலைத்து விடும் என்பதை சங்கத்தமிழ் இலக்கியங்கள் நன்கு உணர்த்துகின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தாய் நலம் எவ்வாறெல்லாம் பேணப்பட வேண்டும் என்பதை பழந்தமிழ் மருத்துவர்கள் அறிந்திருந்தனர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## அழகும் பசலையும்

பெண்ணின் அழகும் நிறமும் அவளது உடல் நலத்தை வெளிப்படுத்துவதாக அமைவதை சங்கப்பாடல்களால் அறியமுடிகிறது. பொருள் தேடச் செல்லும் தலைவனிடம் அவன்பால் அன்பு பூண்ட தலைவியின் அழகு நலம் கெட நெடுந்தொலைவு செல்லாதே என்று அவனது நெஞ்சம் இடித்துரைக்கின்றது.

“பெண்பால்

அவ்வயிற்று அகன்ற அல்குல், தைஇத்

தாழ்மென் கூந்தல், தடமென் பணைத்தோள்

மடந்தை மாண்நலம் புலம்ப”

என்கிறது பூதனார் பாடல் (Annamalai, 2004). அதில் தலைவியின் வெண்ணிறமான பற்கள், அழகிய வயிறு, அல்குல், கூந்தல், தோள் ஆகியன கெடும் என்கிறார்.

பெண்ணின் மன உணர்வுகளால் அல்லது மன அழுத்தங்களால் அவளது உடலிலும், நிறத்திலும் சில மாறுதல்கள் நிகழ்கின்றன. அதனைப் பசலை நோய்' அல்லது 'பசலை பாய்தல்' என பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

குறுந்தொகையில் பசலை பாய்வதால் அவளது மேனி அழகு தனக்கும் பயன் தராமல், தலைவனுக்கும் பயன் தராமல் வீணாவதை வெள்ளிவீதியார் காட்டுகிறார்.

"பசலை உணீஇயர் வேண்டும்

திதலை அல்குல் என் மாமைக் கவினே"

என்னும் வரிகளால் 'மா நிறம்' போன்று ஒளி பொருந்திய பொலிவு தலைவனது பிரிவால் கருத்த நிறமாகி பசலைப் பாய்ந்ததாகப் புலனாகிறது (Puliyur Kesikan, 2008).

மேல் தோல் என்பது உள்ளத்து உணர்வுகளை காட்டும் கண்ணாடியாகும். அதனால் உடலில் உள்ள குருதி நாளங்கள் சுருங்குவதும் விரிவதும்(Vasco constriction and vasco dilation), மெய்நடுக்கம் (Trenors), இதயப் படபடப்பு(Palpitations), வியர்த்தல்(Sweating) முதலியன ஏற்படும்.பசலை பாய்தலோடு உணர்ச்சி நிலையில் தலைவியின் நுதல் வியர்பதாகச் சுட்டிக் காட்டப்படுவதால் ஒருவரின் இயற்கை பண்புகள் மாறுபட்டு காணப்படுவதும் ஆகும்(Distinctive Characters of emotion),[தமிழர் மருத்துவம் சம்பத் க.க., தமிழன் பதிப்பகம் சூளைமேடு,சென்னை முதற்பதிப்பு 2001,பக்.130] என மன அழுத்தங்களால் உடலின் உள்ளும் வெளிப்புறமும் ஏற்படும் மாற்றங்களை உளவியலாரும் இன்றைய மருத்துவர்களும் கூறுகின்றனர்.

## கருச்சிதைவு

அறிவியல் வளர்ச்சியினால் இன்றைய மருத்துவர்கள் கருச்சிதைவிற்கான காரணத்தை கூறுகின்றனர். ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கரு உருவாதலும் பிண்டத்தின் தன்மைகளும் அதன் வளர்ச்சி நிலைகளையும் வளர்ச்சியில் பிழை ஏற்பட்டால் ஏற்படும் விளைவுகளையும் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் போற்றித் திரு அகவலில் கூறியுள்ளார். அவருக்கு முன்பே சங்கத் தமிழர்களும் கரு வளர்ச்சியினையும் கருச்சிதைவினையும் அதனால் ஏற்படும் மாறுதல்களையும் அறிந்திருந்தனர்.

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்

கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு"

என்ற உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் சிந்தனையால் கரு உருவாவதிலும், அதன் வளர்ச்சி நிலையிலும் தவறுகள் நேரும் போது பிறவிக் குறை ஏற்படும் என்கிறார் (Balasubramaniyam, 2004). பிறக்கும் குழந்தை குருடு (Blind), கூனல், குட்டை (Dwarfish), ஊமை (Dumb), செவிடு (Deaf), விலங்குவடிவு (Monster), அறிவு மயக்கம் (Interactive Inbbecile) என்னும் குறைப் பிறவி எடுக்கும் என்று உரைக்கிறார். இவற்றில் உறுப்பில் பிண்டம் என்பது உருவம் இன்றி சிதைந்து போவதை குறிக்கிறது.

இதனையே "ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்" என திருவாசகம் கூறுகிறது. மனநிலையில் மாற்றங்கள் (Stress), மரபணு மாற்றங்கள் (Genetic factors), சுரப்பிகளில் மாறுபாடு (Hormonal changes), பழக்க வழக்கங்களில் மாற்றம் (Behaviours defects such as smoking using drugs, drinking alcohol), சுற்றுப்புற சூழல் காரணிகள் (Infection, radiation, exposure of toxic chemicals) போன்ற காரணங்களாலும் கருவில் உரு மாற்றங்கள் நிகழ்கின்றன.

## உணவு உண்ணும் வேட்கை

கருவுற்ற பெண்கள் இயல்பாக உண்ணும் நிலையிலிருந்து விரும்பும் பொருட்களை உண்ண

வேண்டும் என்று வேட்கை கொள்வது இயல்பு. நாவின் சுவையானது புளிப்பையோ அல்லது சாம்பல், மண் போன்ற பொருட்களையோ விரும்புகிறது. இதனை நோயாக கொள்கின்றனர். சங்க இலக்கியங்கள் ‘வயவு நோய்’ என்று இதனை பதிவு செய்கிறது.

பரத்தையிடம் சென்று திரும்பும் தலைவனிடம் தலைவியின் ‘வயாஅ’ நோய் பற்றி தோழி கூறுகிறாள்.

“புளிங்காய் வேட்கைத்து அன்றுநின்

மலர்ந்த மார்பு இவள் வயாஅ நோய்க்கே”

கருவுற்ற காலத்தில் பெண்களுக்கு தோன்றும் புளிப்புச் சுவையின் வேட்கையினை புளிங்காய் வேட்கை என்ற சொல் உணர்த்துகிறது (Singaravadivelan, 2005).

“வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது

பகைவர் உண்ணா அருமண் ணினையே”

என்ற புறநானூற்று வரிகள் அரசனின் வீரத்தைப் புலப்படுத்தும் உவமையாக அமைந்திருக்கிறது (Balasubramanian, 2004). எனினும் அவை கருவுற்ற பெண்கள் கரு வேட்கையால் மண்ணை உண்பது பற்றி கூறுகிறது. ஆனால் கருவுற்ற காலங்களில் பெண்கள் இத்தகைய வேட்கைக்கு ஆளாகும் போது அது அவர்களது அழகை கெடுத்து விடுகிறது. மட்டுமல்லாமல் வேறு பல இன்னல்களையும் விளைவிக்கிறது.

“வயவு நோய் நலிதலின்

அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கை போல்”

என்று கருவுற்ற பெண்ணின் வயவுறு நோயால் அவளது அழகு குன்றியதையும், அதனால் உறவினர்கள் வருந்தியதையும் கலித்தொகை எடுத்துரைக்கின்றது (Parimanam & Balasubramaniyam, 2007).

## பிள்ளைப் பேற்று மருந்து

இன்று பெண்கள் கருவுற்ற முதல் சூலைத் தலைப்பிரசவம், தலைப்பிள்ளை என்றெல்லாம் குறிப்பிடுவது போல் சங்க காலத்திலும் முதல் சூலை ‘கடுஞ்சூல்’ என்று கூறியுள்ளனர். இப்படி தலைப் பிள்ளையைப் பெற்றுக் கொடுத்த தலைவிக்கு பேய் பிசாசுகள் அண்டாதபடி சடங்குமுறைகள் செய்கின்றனர்.

“கரும்புடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி

நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்

விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்

புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து அவ்வரித்

திதலை அல்குல் முதுபெண்டு ஆகித்” (Balasubramanian, 2007)

குழந்தையைப் பெற்றெடுத்தப் பெண் உடல் நலிவுற்று, உடல் குழைந்து காணப்படுவாள். ஆதலால் அவளைத் தனியிடம் இருந்திட பல்வேறு வகையான மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தி நீராட்டுதல், புகையிடுதல், மருந்துகளை உண்ணச் செய்தல் போன்ற பழக்க வழக்கங்கள் இருப்பதை இன்றளவும் காணலாம். பேய் அணுகக்கூடாது என்ற நம்பிக்கையும் இன்றளவும் மக்களிடையே நிலவுகிறது. பழந்தமிழர்களும் இச்செயல்களையே கடைபிடித்தனர். வெண் கடுகு என்பது ஒரு கிருமிநாசினியாக (Antiseptic) சித்த மருத்துவர்கள் கொள்கிறார்கள். இன்றும் குழந்தை பேற்று மகளிருக்கு வெண்கடுகும் சேர்ந்த மருந்துப் பொருட்கள் உணவோடு கொடுக்கப்படுகின்றன. இதனையே மேற்கண்ட நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது (Balasubramanian, 2007).

## திதலை

'திதலை' என்பது குழந்தை பெற்றெடுத்த ஒவ்வொரு பெண்ணுக்கும் அடிவயிற்றில் ஏற்படும் தழும்பு ஆகும். இதனை 'Linea Alba' என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். அதற்கு 'வெள்ளை கோடு' என்பது பொருளாக இருக்கிறது. "கர்ப்ப காலத்தில் கரு வளரவளர வயிற்றின் அடிப்பாகத்தில் தசை நார்கள் அறுந்து போவதால் ஏற்படும் தழும்பு ஆகும். விரிவடைந்த தோலானது குழந்தைப் பிறந்தவுடன் பழைய நிலைக்கு சுருங்கி தழும்பு ஏற்படும். இது குழந்தை பிறந்தவுடன் உடலில் தோன்றும் ஒரு மேனி வேறுபாடு. மேலும் இது இயற்கையான மாறுபாடாகும்" என்கிறார் (Michael Seyarasu, 2015).

## முயங்குதல் கூடாது

குழந்தைப் பேற்றுக்குப் பின் பெண்ணின் உடல் நலிவுற்று காணப்படும். கண்கள் குழிந்தும், முகம் வெளிரியும் இருக்கும். மட்டுமல்லாமல் குழந்தைக்குப் பால்லூட்டுவதால் பால் நாற்றமும், குழந்தை பேற்று காலத்தில் வெளியாகும் குருதியின் நாற்றமும் கலந்து ஒருவகையான நாற்றம் இருப்பது இயற்கை. அக்காலகட்டங்களில் அவளது நலிவுற்ற உடலைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுவர். அத்தகைய சூழலில் அவளோடு முயங்குதல் கூடாது என்பதை சங்ககால மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

"புதல்வனை ஈன்ற என் மேனி

முயங்கன்மோ"

என்று தலைவி தலைவனிடம் கேட்பதாக ஐங்குறுநூறு காட்டுகிறது (Singaravadivelan, 2005). இத்தகைய தொரு செயல்பாட்டால் இன்றளவும் பழங்குடிமக்கள் குழந்தைப் பெற்றப் பெண்களை 'பிள்ளை வீடு' என்னும் தனி வீட்டில் ஒரு மாத காலத்திற்கு தங்கவைத்து உடல் நலம் பேணும்வதைக் காணலாம்.

## பால் சுரக்கும் மார்பகம்

கருவுற்ற காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் குறிப்பிட்ட சில நோய்களைத் தவிர பொதுவான நோய்களும் இருக்கின்றன. பூப்படைந்தப் பெண்களுக்கு மார்பக வளர்ச்சியின்மை என்பது மருத்துவர்களால் நோயாக கருதப்படுகிறது.

கருவுற்றபோதே பால் சுரத்தலில் பெண் தயாராகிவிடுகிறாள். குழந்தை பிறந்த பின்னர் இயற்கையிலேயே அவள் உண்ணும் உணவுகளால் தாய்ப்பால் சுரந்துவிடும். பால் சுரத்தலில் சில சிக்கல்கள் ஏற்படும்போது அது மார்பகம் சார்ந்த நோயாக அமைகிறது. இந்த பால் சுரத்தல் என்பது நோயற்றத் தன்மையை வெளிப்படுத்துகிறது. இதனை சங்கத் தமிழ்ப் புலவர்கள் அறிந்திருந்தனர்.

"தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்ப

புடைதிரண் டிருந்த குடத்த"

என்று சுட்டுகிறது. யானை தந்தங்களால் செய்த கட்டிலின் இணைப்பாகிய குடம், சூல் முற்றிய மகளிரது பாலுடைய பருத்த முலையை ஒத்திருந்தது என்று உவமையாகக் கூறினாலும் மகப்பேற்றையுடைய பெண்ணுக்கு பால் சுரக்கும் பருத்த மார்பின் முக்கியத்துவத்தை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

## முடிவுரை

பெண்ணின் அழகும் நிறமும் இரசிப்பதற்கானது என்ற எண்ணமே பரவலாக உள்ளது. ஆனால் அழகும், நிறமும் பெண்ணின் உடல் நலன் சார்ந்தது என்னும் சிந்தனையை சங்க கால மருத்துவர்கள் தெளிவுறுத்துகின்றனர். பெண்ணுக்கு ஏற்படும் பசலை நோய் என்பது இலக்கியங்கள் வாயிலாக சுவைத்து இன்புறுவதற்கானது அல்ல. அதுவும் பெண்ணின் மன உணர்வு சார்ந்த நோய் என்பதையும் பழந்தமிழ் பாடல்கள் வழியாக உணரமுடிகின்றது. கருச்சிதைவும், கருவில் ஏற்படும் குறைபாடுகளும்,

பிள்ளைப் பேற்றின் போது பேணிக்காக்கும் மருந்துகளும் சங்கத்தமிழர் வாழ்வியலைப் படம் பிடித்து காட்டுகின்றன. குழந்தை பிறந்தபின் செய்யக்கூடாதவைகளும், வயிற்றில் ஏற்படும் தழும்புகளும், பால் சுரத்தலில் மார்பகத்தின் பங்கு என்ன என்பது பற்றியும் பல சிந்தனைகளை பழந்தமிழ் இலக்கியங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன. இவையாவும் தமிழரின் மருத்துவக்கலை சிறப்பினையே தெளிவுறுத்துகின்றனர்.

## References


Annamalai, S, (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India.

Balasubramanian, K.V., (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Balasubramanian, K.V., (2007) Natrinai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Michael Seyarasu, M., (2015) Thamizhar Maruthuvam, New Century Book House, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2007) Kalithogai, New Century Book House, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Singaravadivelan, Ara., (2005) Ainkurunuru Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India.


## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

A. Precilla, Maternal Medicine in Ancient Tamil Literature, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 131-135. DOI: https://doi.org/10.54392/ijmrd223S126